## இணையதள அறிவிக்கை

ந.க.எண்.48971/2019/ஊ.வ.9, நாள்:11.11.2019

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு

### மதுரை மாவட்டம்

### அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமன அறிவிக்கை (Notification)

மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலகு, அரசுத் தலைப்பில் காலியாக உள்ள 1 (ஒன்று) அலுவலக உதவியாளர் மற்றும் 3 (மூன்று) இரவுக் காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்க்கண்ட விபரப்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு, தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அலுவலக உதவியாளர் – ஒரு காலிப்பணியிடம்**

| வ. எண். | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 (ஒன்று) | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் தவிர) (Other than Backward Class Muslims)(Non Priority) | -- |

**கல்வித் தகுதி –** அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு **8–ம் வகுப்பு தேர்ச்சி** பெற்றிருக்க வேண்டும்.
சிறப்பு தகுதி – மிதி வண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

**இரவுக் காவலர் – மூன்று காலிப்பணியிடம்**

| வ. எண். | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Communal Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1 | இரவுக்காவலர் | 3 (மூன்று) | பொதுப்போட்டி (General Turn)(priority) | – |
| 2 | | | ஆதிதிராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்) [Schedule Caste (Arunthathiyars on Preferential Basis)] (priority) | பெண் (ஆதரவற்ற விதவை) Women - Destitue Widow |
| 3 | | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் [Most Backward Classes and Denotified Communities] (priority) | – |

இரவுக் காவலர் தகுதி – எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

| இனம் | வயது |
|---|---|
| பொதுப் பரிவினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். |

- அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் பணிக்கு ஊதிய கட்டு: ரூ.15700 – 50000 (நிலை–1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்.

- **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**

  மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),
  மாவட்ட ஆட்சியர் அலுவலகம்(வளர்ச்சி பிரிவு),
  மதுரை –20.

**நிபந்தனைகள்:**

1. மதுரை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித் தகுதி, இருப்பிடம் (ரேசன் கார்டு மற்றும் ஆதார் காட்டு), சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இன சுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
6. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (call Letter) அனுப்பி வைக்கப்படும்.
7. விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) மதுரை அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 25.11.2019 தேதியன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஒவ்வொரு காலிப் பதவியிடத்திற்கும் தனித் தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
9. நியமனத்தை இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)க்கு உண்டு.

அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் விபரங்கள் மற்றும் விண்ணப்படிவம் மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அலுவலகத்திலும், தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் (National Service Portal) www.ncs.gov.inமற்றும் மதுரை மாவட்ட இணையதளம் www.madurai.nic.inஆகிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(கையொப்பம்) 11/11/19

மாவட்ட ஆட்சித்தலைவரின்நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி)(மு.கூ.பொ.),
மதுரை மாவட்டம்.